DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.80/2024**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காளிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.03.2026

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் இரகுசேரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 24.04.2024ம் தேதி காலை 7.30 மணியளவில் ஆண்டவர் செட் அருகில் அ.சா.1 வந்துகொண்டிருந்தார். எதிரிகள் ஜெயச்சந்திரன் பிடித்துக்கொள்ள அவர் மகன் பிரபு இரும்பு ராடால் இடது பக்க காதில் அ.சா.1ஐ அடித்தார்கள். பிறகு அ.சா.1 அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வெள்ளி சாமான்கள் செய்யும் பட்டரையில் வேலை செய்கிறேன். நான் வேலை செய்யும் பட்டரை தேவகோட்டை இரகுசேரியில் என் வீட்டின் அருகே உள்ள சிவன்

கோவில் அருகில் உள்ளது. நான் வேலை செய்யும் பட்டரையில் ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டும் விடுமுறை. மற்ற நாட்கள் எல்லாம் வேலை நாட்கள்தான். நான் மற்ற நாட்கள் வேலைக்கு சென்றுவிடுவேன். வெள்ளி பட்டறைக்கும் ஆண்டவர் செட்டுக்கும் இடையே சுமார் 3 கீலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.2 எனக்கு பங்காளி முறை. அ.சா.2 க்கும் எதிரிகளுக்கும் இரகுசேரியில் உள்ள கல்யாணி முத்தையா கோவில் சம்பந்தமாக பிரச்சனை உள்ள விபரம் எனக்கு தெரியும். நானும் எதிரிகளும் உறவினர்களா என்றால் இல்லை. அ.சா.1, அ.சா.2 ம் என் உறவினர்கள். நான் போலீசார் விசாரணையில் நான் எந்த வாகனத்தில் சென்றேன் எவ்வாறு சென்றேன் என்று கேட்டு தெரிந்து கொண்டார்களா என்றால் ஆமாம். மேற்படி வாகனத்தின் எண்னை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். என்னை நீதிமன்றத்திற்கு அ.சா.1 தான் கூட்டிவந்தார் என்றால் ஆமாம். நான் அ.சா.1 ஐ மருத்துவமனைக்கோ காவல் நிலையத்திற்கோ அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 ஐ பார்த்திருந்தால் அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்பேன் என்றால் சரிதான். நான் அ.சா.1 ஐ பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் அனைத்தும் சொல்லிதான் கேள்விபட்டேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அ.சா.1, அ.சா.2 எனக்கு உறவினர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.